VIDE FORT ST. GEORGE GAZETTE PAGE 674 OF PART 1. B DATED 10TH. NOV 1931

# The Rajah of Panagal.

# பனகல் அரசர்.




ஒற்றுமை ஆபீஸ்,
222 சைதாப்பேட்டை, மதராஸ்.

காபிரைட்] 1931 [அணா 3

Specimen

# The Rajah of Panagal.

# பனகல் அரசர்.



மணி - திருஞான சம்பந்த முதலியார்.

ஒற்றுமை ஆபீஸ்,
சைதாப்பேட்டை, மதராஸ்.

காபிரைட்] 1931 [அணா 3

PRINTED AT THE B. N. PRESS, MOUNT ROAD,
MADRAS.

# பனகல் அரசர்.

## அதிகாரம் ஒன்று.

### குடிச் சிறப்பு.

பனகல் அரசர் முன்னோர்கள் பெரிய பணக்காரர்கள். அவர்களுக்கு ஏராளமான நிலங்களுண்டு. நிலங்கள் மிகுதியாக வைத்திருப்பவர்களுக்கு ஜமீன்தார்கள் என்று பெயர். அவர்களுக்கு அநேக வேலைக்காரர்கள் உண்டு; அதிகாரமும், ஆடம்பரமும் உண்டு. அவர்கள் வசிக்கும் ஊர்களிலுள்ள ஜனங்கள் அவர்களைச் சிறு மன்னர்களைப்போல் எண்ணுவார்கள். அவ்வளவு பெருமை ஜமீன்தார்களுக்கு உண்டு.

பனகல் அரசர் பிறந்த குடும்பமும் ஒரு ஜமீன்தார் குடும்பமே. அக்குடும்பத்தார் பெரிய பணக்காரர்களாக இருந்த போதிலும், எல்லோரிடத்தும் மரியாதையாகவும், ஏழைகளிடத்தில் அன்பாகவும் நடந்து வந்தார்கள். அவர்களுக்கு வீண்பெருமையும், கர்வமும் ஒரு சிறிதும் இல்லை. பெருந்தன்மை என்பது அவர்களுக்குச்

சொந்தமாக இருந்தது. அநேகமாக பெரிய ஜமீன்தார்கள் குடும்பத்தில் பிறந்தவர்கள் கல்வி சிறப்பாகக் கற்பதில்லை. ஆனால், பனகல் அரசர் முன்னோர்கள் நன்றாகவும் படித்தவர்கள்.

காளாஸ்திரி என்று ஒரு சிவஸ்தலம் உண்டு. அவ்வூரில் பல ஜமீன்தார் குடும்பங்கள் உண்டு. அக்குடும்பங்கள் ஒன்றில் தான் பனகல் அரசர் பிறந்தார். பெரிய பிரபுக்களுக்குச் சாதாரண ஜனங்கள் படும் கஷ்டம் தெரிவதேயில்லை. அவர்கள் தங்களைப் போலவே மற்றவர்களும் சுகமாக இருக்கிறார்கள் என்று எண்ணிக் கொள்ளுகிறார்கள். ஆனால், பனகல் அரசர் ஒரு பெரிய பிரபுவின் குடும்பத்தில் பிறந்திருந்தும், அவர் சாதாரண ஜனங்களின் கஷ்டங்களையும், ஏழைகளின் துன்பங்களையும் வெகு நன்றாகத் தெரிந்துகொண்டார். அவர் அவர்களுக்காகவே மிகவும் பாடுபட்டு உழைத்தார். அப்படிப்பட்ட அருமையான குணமுள்ள அப்பெரியவரைப் பற்றி நீங்கள் பல விஷயங்கள் தெரிந்துகொள்ள வேண்டாமா? இச்சிறு புத்தகத்தில் அவைகள் இருக்கின்றன. நீங்கள் படித்துச் சந்தோஷம் அடையுங்கள்.

# அதிகாரம் இரண்டு.

## இளமையில் கற்ற கல்வி.

பனகல் அரசர் 1866-ம் வருஷம் பிறந்தார். அவர் குழந்தையாக இருந்தபோது மிக அழகாக விளங்கினர். அக்குழந்தையை எல்லோரும் ஆசையாகப் பார்த்தார்கள். சில பெண்மணிகள் அது இவ்வுலகத்தில் பெருங்கீர்த்தி அடையும் என்று சொல்லி, அதற்குப் பற்பல பொன் முத்தங்கள் கொடுத்தார்கள். சில பாட்டிகள் அக்குழந்தை நூறு வயது வரையில் தங்கக் கட்டிபோல் இருக்கும் என்று வாழ்த்தினர்கள். அதைப் பெற்ற தாயோ அடைந்த சந்தோஷத்திற்கு அளவேயில்லை; தந்தையோ குழந்தையைப் பார்த்துப் பார்த்துப் பூரித்தார்.

பனகல் அரசர் இளஞ்சந்திரன்போல் வெகு அழகோடு வளம்பட வளர்ந்து வந்தார். அவர் திண்ணிய தேகமும் பெற்றிருந்தார். இரண்டு, மூன்று வருஷங்களானதும், அவர் நடை அழகும், மதலைச் சொல்லழகும் எல்லோரையும் சந்தோஷக் கடலில் அழுத்திவிட்டன.

பிறகு கல்வி கற்கும் பருவம் வந்தது. அவர் தெலுங்கும்,சமஸ்கிருதமும் படிக்க ஆரம்பித்தார். சமஸ்கிருத பாஷையைக் கற்பது சுலபமான காரிய

மல்ல. பிராமணர்களுக்கு அப்பாஷை சொந்தம். அப்படியிருந்தும் அதை அவர்களே தெரிந்து கொள்ள வெகு கஷ்டம் அடைகிறார்கள். எந்தப் பாஷையை எளிதாகக் கற்றுக்கொண்டாலும் சமஸ்கிருத பாஷையை எளிதாகக் கற்கப் பிராமணப் பிள்ளைகளாலும் முடியாது. ஆனால், பனகல் அரசர் அப்பாஷையை அறிந்து கொள்வதில் சிறிதும் அக்கஷ்டம் கொள்ளவில்லை. அவர் மிகவும் அறிவாளி என்பது இதனாலேயே விளங்கும். மிகச் சிறு வயதிலேயே அவருக்கு மிகச் சிறந்த யோசனைகள் உண்டாயின. படித்த பாடங்களைப் பலமுறை எண்ணி எண்ணி, அவைகளை மிகத் தெளிவாகத் தெரிந்து கொள்வார். கல்வி கற்கும் போது அவர் மிகப் பொறுமையாகவும், அடக்கமாகவும் இருப்பார். உபாத்தியாயரிடத்துப் பனகல் அரசருக்கு அதிக விசுவாசமும், நன்றியும் உண்டு. அவர் கல்வியில் எல்லோரைக் காட்டிலும் கெட்டிக்காரராக இருந்தார். அவரே எல்லாப் பாடங்களிலும் முதன்மை பெற்றார்.

பனகல் அரசர் பற்பல சிநேகிதர்களோடு கூடிக்கொண்டு வகுப்பில் சேஷ்டைகள் செய்யவே மாட்டார்; உபாத்தியாயரை மறைவில் திட்டவு மாட்டார். பதுமைபோல் மிகப் பொறுமையாக வகுப்பில் அமர்ந்து, பாடங்களைக் கவனமாகக்

கேட்டு, வீட்டில் ஒழுங்காகப் படித்து வந்தார். ஆகையால், அவர் பதினெட்டு வயதிற்குள் தெலுங்கு, சமஸ்கிருதம் ஆகிய இந்த இரண்டு பாஷைகளிலும் வித்துவ மணியாக விளங்கி விட்டார். வயது மிகுந்த, கல்வியில் சிறந்த அநேக சமஸ்கிருத பண்டிதர்களும், தெலுங்கு பண்டிதர்களும் அவர் புலமையைப் புகழ்ந்து சந்தோஷமடைந்தார்கள்.

---

# அதிகாரம் மூன்று.

## ஆங்கிலக் கல்வி.

பானகல் அரசர் பதினெட்டு வயது வரையில் ஆங்கிலப் பாஷையைப் படிக்கவே யில்லை. அவர் தகப்பனார் பெரிய பணக்காரர் ஆகையால், ஆங்கிலப் பாஷை அவசிய மில்லை என்று ஒருகால் எண்ணி இருப்பார். ஏனென்றால், இந்தியர்களில் அநேகர் ஆங்கிலப் பாஷையை வயிற்றுப் பிழைப்புக்கே என்று நினைக்கிறார்கள். அவர்கள் நினைப்பதுபோலவே அநேக இந்தியமாணவரும் ஆங்கிலப்பாஷையைப் படித்து ஏதோ ஒரு உத்தியோகத்திற்குப் போய்விடுகிறார்கள். அதன் பிறகு பி. ஏ. பட்டம் பெற்றவர்களிலும் அநேகர் ஆங்கிலப் புத்தகங்களைப் படிப்பதில்லை. இந்த நிலையில் நம்

மவர்களில் அநேகர் இருப்பதால், பனகல் அரசர் தகப்பனர் ஆங்கிலத்தைப் பொருட்படுத்தாம லிருந்தார். ஆனால், அவர் சிநேகிதர்களில் பலர் ஆங்கிலப் பாஷையின் அருமையை அதிகமாக மதித்தார்கள். அவர்கள் பனகல் அரசரின் புத்திக் கூர்மையை மெச்சி, அவருக்கு ஆங்கிலம் தெரிய வேண்டியது அவசியம் என்று அவர் தந்தைக் குச் சொன்னார்கள்.

அதைக் கேட்டுப் பனகல் அரசரின் தந்தை தம் புதல்வனுக்கு ஆங்கிலம் தெரிய வேண்டியது மிகவும் அவசியம் என்று எண்ணினர். கேவலம் வயிற்றுப் பிழைப்பிற்குத்தான் ஆங்கிலப் பாஷை பயன் படும் என்று அவர் நினைக்காமல், தம் நண் பர்களின் நல்ல யோசனையை மதித்து, தம் புத்தி ரனைச் சென்னைக்கு அனுப்பினர். சென்னையி லுள்ள திருவல்லிக்கேணியில் பெயர் பெற்ற ஒரு பாடசாலை உண்டு. அதற்கு இந்து-ஐ-ஸ்கூல் (Hindu High School) என்று பெயர். பனகல் அரசர் ஆங்கிலக் கல்வி அங்குதான் கற்றுக் கொள்ள ஆரம்பித்தார்.

அவர் சமஸ்கிருதமும், தெலுங்கும் நன்ரு கக் கற்றுக் கொண்டிருந்ததால், ஆங்கிலப் பாஷை யைக் கற்றுக் கொள்வதில் அவருக்குச் சிறிதும் கஷ்டம் தெரியவில்லை. வெகு விரைவில் ஆங்கி

லத்தையும் தமது சொந்த பாஷையாக அவர் செய்துகொண்டார். பல ஆசிரியர்கள் பல பாடங்களுக்கு நியமிக்கப் பட்டிருக்கிறார்கள் என்று உங்களுக்குத் தெரியும். அவர்களில் தெலுங்கு, தமிழ், சமஸ்கிருதம் முதலிய பாஷைகளைக் கற்பிக்கும் பண்டிதர்களிடத்தில் அநேக பிள்ளைகள் அநேக விதமான குறும்புகள் செய்வதுண்டு. அவர்களுக்குப் பிள்ளைகளிடத்தில் இரக்கம் மிகுதியாக இருப்பதால், பிள்ளைகள் அவர்களில் அநேகரை ஏமாற்றி விடுகிறார்கள். ஆனால், பனகல் அரசர் அப்படிப்பட்டவர் அல்லர். அவர் எல்லா ஆசிரியர்களையும் ஒரே விதமாக மதித்து, மிகவும் பணிவாக நடந்து, அவர்கள் எல்லோரிடத்திலும் மிக நல்ல மாணவன் என்று பெயர் வாங்கினார். அடக்கம், பணிவு ஆகிய இவை இரண்டுடன் புத்திக் கூர்மையும், உழைப்பும் அவருக்கு மிகுதியாக இருந்தன. ஆகையால், அவர் மிக எளிதாகப் பத்தாவது வகுப்புப் பரீக்ஷையில் தேறினார்.

பனகல் அரசர் எப். ஏ. (F. A) வாசிக்கச் சென்னையிலுள்ள தலைமைக் கல்லூரிக்குச் (Presidency College) சென்றார். அக்கல்லூரியில் அவர் எம். ஏ. (M. A) வகுப்பு வரையில் வாசித்தார். அவர் இளவயதில் கற்றுக்கொண்ட

சமஸ்கிருதபாஷை அந்தமேல் வகுப்புகளில் அவருக்குப் பெரும் பயனை விளைவித்தது. ஒவ்வொரு பரீக்ஷையிலும் அவர் நன்மதிப்போடு தேர்ச்சியடைந்தார். எம். ஏ. (M. A) பரீக்ஷக்கு அவர் சமஸ்கிருத பாஷையை எடுத்துக்கொண்டார். சமஸ்கிருத பாஷை எடுத்துக்கொண்டு எம். ஏ. (M. A) பட்டம் அடைகிறவர்கள் மிகவும் அரிது. ஆனால், பனகல் அரசர் சமஸ்கிருத பாஷையை எடுத்துக்கொண்டே எம். ஏ. பட்டம் கஷ்டமில்லாமல் பெற்றார்.

அவர் மேற்கூறிய கலாசாலையில் படித்துக்கொண்டிருந்தபோதே, பொது ஜனங்களின் நன்மைக்காக உழைக்கவேண்டும் என்ற ஆசை அவருக்கு உண்டாய்விட்டது. அக்காலத்திலேயே அவர் பற்பல பொதுநலச் சங்கங்களில் சேர்ந்து கொள்ள விரும்பினார். ஆனால், அவர் நினைத்தபடி பொதுநலச்சங்கங்களில் அப்போது சேர்ந்து உழைக்க அவரால் முடியவில்லை. ஆகையால், அவர் ஆசையை அவ்விஷயத்தில் அழுத்தமாக வைத்துக்கொண்டு, கல்வித் துறையில் பெரிய பட்டம் அடைகிற வரையில் கல்வியையே முதன்மையாகக் கற்று வந்தார்.

# அதிகாரம் நான்கு.

## பொதுநல நோக்கம்.

பனகல் அரசர் எம். ஏ. (M. A) பட்டம் பெற்றதும், பெரிய உத்தியோகத்தை அடைய முயற்சி செய்யவில்லை. வயிற்றுப் பிழைப்பிற்கு அநேகர் பெரிய பட்டங்கள் அடைய விரும்புவது போல அவர் விரும்பவில்லை. உத்தியோகத்திற்கும், கல்விக்கும் யாதொரு சம்பந்தமுமில்லை என்பதுதான் அவர் நோக்கம். ஒருவன் கல்வி கற்பது தன் அறிவை விருத்தி செய்து கொள்ளவும், மற்றவர்கள் அறிவை விருத்தி செய்யவும், ஏழைகளுக்கு நன்மை செய்யவும் என்றுதான் அவர் எண்ணினார். ஆதலால், அவர் கலாசாலையை விட்டதும், பற்பல பொது நலச் சங்கங்களில் சேர்ந்து கொண்டார். தம்மால் கூடிய வரையில் அந்த இளவயதிலேயே ஜனங்களின் நன்மைக்காக உழைத்தார்.

பனகல் அரசர் கல்வியிலும் கெட்டிக்காரர்; அறிவிலும் மிகப் பெரியவர். அவர் பெருமையைச் சர்வ கலாசாலை சங்கத்தார் நன்றாகத் தெரிந்து கொண்டார்கள். ஆகையால், அவர்கள் அவரைச் சர்வ கலாசாலைப் பரீக்ஷகர்களில் ஒருவராக ஏற்படுத்தினார்கள். அவர் அந்த உத்

தியோகத்தை வெகு நன்ருகவும், திறமையாகவும் செய்தார். இன்னும் அவர்கள் பனகல் அரசரின் அபிப்பிராயங்களைக் கேட்பதுண்டு. ஒவ்வொரு சமயமும் அவர் சிறந்த அபிப்பிராயம் கொடுத்து வந்தார்.

நமது நாட்டில் அநேக மக்கள் கல்வி யில்லாமல் இன்னும் இருக்கிருர்கள். எத்தனையோ ஏழை ஜனங்கள் கையெழுத்து தங்கள் தாய்ப் பாஷையிலும் போடத் தெரியாமலிருக்கிருர்கள். அநேக ஜனங்களுக்கு ஏ. பி. சி. டி A. B. C. D என்பது என்ன வென்று தெரியாது. தாழ்ந்த சாதி மக்களில் தான் அநேகர் கல்வியில்லாக் குருடர்களாக இருக்கிருர்கள். அவர்களுக்குச் சரியான உணவும், உடையும் வீடும் இல்லை. பலவித நோய்கள் அவர்களுக்குத்தான் மிகுதியாக வருகின்றன. அப்படிப்பட்ட தாழ்ந்த குல ஜனங்களுக்குத்தான் முதலில் பல நன்மைகள் செய்ய வேண்டும் என்று பனகல் அரசர் விரும்பினுர். அவர்களுக்குத்தான் முதலில் கல்வியைக் கொடுக்கவேண்டும் என்று அவர் தீர்மானித்தார். ஒரு தேசம் நன்மை அடைய வேண்டுமானுல், அதிலுள்ள ஜனங்கள் எல்லோரும் கல்வி கற்கவேண்டும். அவ்வாறு கல்வி கற்றிருக்கும் ஜனங்களையுடைய தேசங்கள் தான் மேலுக்கு மேல் விருத்தியாகின்றன.

பனகல் அரசர் அந்த உளவை நன்ருக அறிந்தவர். ஆகையால், கல்வி எல்லா ஜனங்களுக்கும் பரவும்படியான முயற்சிகள் பல செய்தார். அதுவும் அல்லாமல், கல்வி எந்த விதமாகப் பிள்ளைகளுக்குப் போதிக்க வேண்டுமென்றும், புதிய வழிகள் காட்டினுர்.

---

## அதிகாரம் ஐந்து.

### சட்ட சபை.

பனகல் அரசர் பெரிய உத்தியோகத்தை அடைய விரும்பவில்லை. ஜனங்களுக்குப் பல வழிகளில் நன்மை செய்வதையே விரும்பினுர். தமக்குச் சந்தோஷகரமான வாழ்க்கையைத் தேடிக்கொள்ளவில்லை; ஆடம்பரம் என்பது அவரிடத்தில் சிறிதுமில்லை; ஒரு சிறந்த அரசர் போல் அவர் அழகாக இருந்தாலும், ஆடம்பரமான உடைகளை அணியவில்லை; கொழுமையான உணவுகளைச் சாப்பிட்டு இன்பமடையவும் எண்ணவில்லை; பலபேர் தம்மைப் புகழவேண்டும் என்றும் ஆசைப்படவில்லை; அவர் ஆசை எல்லாம் ஏழை ஜனங்களுக்கு முதலில் சுகம் தேடுவதிலேயே அழுந்தியிருந்தது.

அப்படிப்பட்ட நல்ல மனத்தைப் பனகல் அரசர் பெற்றிருந்ததால் எந்த வழியில் ஏழை

ஜனங்களுக்கு நன்மைசெய்யலாம் என்று இரவும், பகலும் எண்ணிக்கொண்டிருந்தார். அப்படி இருக்கையில், அவருக்கு ஒரு நாள் ஒரு சிறந்த எண்ணம் உண்டாயிற்று. அதாவது, துரைத்தனத்தார் ஏற்படுத்தி இருந்த சட்டசபையில் தாம் சேர்ந்து கொள்ள வேண்டும் என்பதேயாகும். அவ்வாறு சேர்ந்து கொள்வதற்குப் பல ஜமீன்தார்கள் அவருக்கு "ஓட்டு" கொடுக்க வேண்டியதாக இருந்தது. பிள்ளைகளே, ஓட்டு என்றால் உங்களுக்குத் தெரியுமா? உங்கள் ஊர்களில் சில வேளைகளில் சில ஜனங்கள் கூட்டம் கூட்டமாக வந்து, "ஓட்டு எங்களுக்குக் கொடுங்கள்," என்று கேட்கிறார்கள் அல்லவா! அதாவது ஜனங்கள் ஒரே ஒருவரைத் தங்கள் நன்மைக்காக அரசாங்கத்தாரிடம் பேச அனுப்புவதேயாகும். அப்படி அநேக ஆயிர ஜனங்களின் நன்மைக்காக ஒருவரை நம் ஜனங்களே நம்பி அனுப்புவதற்கு ஒத்துக்கொண்டு ஒரு சீட்டில் அவர் பெயரைக் குறிப்பித்துப் போடுவதற்குத்தான் ஆங்கிலப் பாஷையில் 'ஓட்டு' என்று பெயர். சிறுவர்களே! நீங்கள் இப்போது 'ஓட்டு' என்னவென்று தெரிந்து கொண்டீர்கள்.

பனகல் அரசர் பல ஜமீன்தார்கள் ஓட்டுகளை வாங்கிக்கொண்டு கவர்ன்மெண்டு சட்ட சபைக்கு ஒரு அங்கத்தினராகப் போனார். சாதாரண ஜமீன்

தார்களுக்கு அந்தவிதமான பெருமை கிடைப்பது மிகவும் அரிது. ஆனால், பனகல் அரசர் மிகவும் கெட்டிக்காரர் என்றும், மிகவும் நல்லவரென்றும் ஜமீன்தார்களில் பலர் தெரிந்துகொண்டிருந்ததால், அவர்கள் அவரையே சட்டசபைக்கு அனுப்பினார்கள். சட்ட சபை என்றால் என்னவென்று நீங்கள் தெரிந்துகொள்ள ஆசைப்படுவீர்கள். அச்சபையில் அநேக பெரிய கல்விமான்களும், அறிவாளிகளும் இருப்பார்கள். அவர்கள் சேர்ந்து ஜனங்களின் நன்மைக்காகப் பல விஷயங்கள் பேசுவார்கள். அவர்களே பலவித சட்டங்களும் ஏற்படுத்துவார்கள். இப்படிப்பட்ட பெருமையை உடைய சட்ட சபையில் பனகல் அரசர் 1912-ஆம் வருஷம் சேர்ந்தார். அச்சபையில் 1915-ஆம் வருஷம் வரையில் இருந்தார்.

பனகல் அரசர் பேசுவதில் மிகவும் கெட்டிக்காரர் அல்லர். அவருக்கு எதிலும் ஆடம்பரம் இல்லாதது போலவே, பேசுவதிலும் ஒரு ஆடம்பரமும் இல்லை. பல ஜனங்கள் கைதட்டி சந்தோஷ மடையும்படி அழகாகவும், வேடிக்கையாகவும் அவரால் பேச இயலாது. அவர் வெகு நேரம் ஆலோசனை செய்து பிறகு தான் ஒரு விஷயத்தை எடுத்துப் பேசுவார். பொருத்த மில்லாமலும், பயனில்லாமலும் அவர்

ஒரு வார்த்தையும் சொல்லவேமாட்டார். சொற்களைத் தராசில் வைத்து நிறுப்பதுபோல விஷயங்களை வெகு அளவாகவும், ஒழுங்காகவும், பொருத்தமாகவும் நிறுத்திப் பேசுவதில் வெகு கெட்டிக்காரர். ஆனால், அடிக்கடி எந்த இடத்திலும் பேசுகிற வழக்கம் கிடையாது. அப்படியே மேற்கூறிய சட்ட சபையிலிருந்தபோது பல தடவை பேசவில்லை. ஆனால், அவர் எப்பொழுது பேசினாலும், அவர் பேச்சுக்கு எதிரில்லை. அவர் சொல்லை எல்லோரும் ஒத்துக் கொள்வார்கள். அவர் தாம் சொல்லுவது போலவே செய்தும் காட்டுவார். ஆதலால், அவருக்குச் சட்ட சபையில் நல்ல மதிப்பு இருந்தது. அவர் பற்பல வழிகளில் ஜனங்களுக்கு நன்மை செய்து வந்தார். ஆனால், முக்கியமாகப் பஞ்சமர்கள் முதலிய தாழ்ந்த குலத்து ஜனங்களுக்குத்தான் முதலாவதாக நன்மை செய்ய கங்கணம் கட்டிக்கொண்டார். ஆகையால், அந்த ஏழை ஜனங்களுக்கு நன்மை செய்யத் தனியாக ஆபீசும், தனியாக உத்தியோகஸ்தரும் இருக்கவேண்டும் என்று வாதாடினர். அப்படி அவர் பலமுறை பேசி எல்லோர் மனங்களையும் தம் வழியில் திருப்பி வைத்தார். அவ்வாறு செய்ததால், சிலவருஷங்கள் சென்றதும், தாழ்ந்த குல ஜனங்களின் நன்மைகளைக் கவனிக்கத் தனி

யாக ஒரு ஆபீசும் ஏற்படுத்தப்பட்டது; தனியாக ஒரு உத்தியோகஸ்தரும் ஏற்படுத்தப்பட்டார். அப்படி ஏற்பட்டதால், அந்த ஏழை ஜனங்களுக்கு இப்போது பல நன்மைகள் விளைகின்றன. இவ்வளவு நன்மைகளுக்கும் காரண கர்த்தராக இருந்தவர் பனகல் அரசரே ஆவார்.

---

## அதிகாரம் ஆறு.

### நியாயக் கட்சி.

அநேக வருஷங்களாக நமது தேசத்தில் ஒரு வகுப்பு மக்கள் மிக உயர்ந்த மதிப்பு அடைந்து வந்தார்கள். அவர்களுக்கு எல்லா ஜனங்களும் ஒரே விதமாக மரியாதையும், அன்பும், சுகமும் அடைவது பிரியமில்லை. தாங்கள் எல்லோரைக் காட்டிலும் சிறந்தவர்கள் என்ற எண்ணம் அவர்களுக்கு இருந்தது. தாழ்ந்த குல ஜனங்களைக் கண்ணால் பார்ப்பதும் பாவம் என்றும் அவர்களில் சிலர் எண்ணியிருந்தார்கள்.

மன்னாதி மன்னர்களும் தங்களுக்குத் தாழ்ந்தவர்கள்தான் என்றும் அவர்கள் தீர்மானித்திருந்தார்கள். அநேக வருஷங்களுக்குமுன் அவர்கள் சாதித் தலைமைபூண்டு எல்லோரையும் தங்களுக்குத் தனி மதிப்பு கொடுக்கும்படி செய்துவிட்டார்

கள். அவர்கள் வெகு தந்திரசாலிகளாகவும், கெட்டிக்காரர்களாகவும் இருந்தபடியால், கவர்ன்மெண்டில் பெரிய உத்தியோகங்களையும் அவர்களே அடைந்து வந்தார்கள். பல வழிகளில் அவர்கள் தங்கள் பிள்ளைகளையே நன்றாகப் படிக்கச்செய்து, பல உத்தியோக சாலைகளிலும் அவர்களையே நிரப்பி விட்டார்கள். அப்படிச் செய்ததால், மற்றக் குல மக்களுக்கு உத்தியோகங்கள் கிடைப்பது அருமையாய் விட்டது. இப்படியிருந்த காலத்தில், மற்றக் குலத்தார்கள் மனங்களில் ஒரு அபிப்பிராயம் வெகுநாளாக இருந்து வந்தது. அதாவது அவர்கள் எல்லோரும் ஒன்று சேர்ந்து கொண்டு, ஒரு புதிய கட்சி ஏற்படுத்த வேண்டும் என்று தீர்மானித்ததேயாகும்.

அப்படிப்பட்ட கட்சியானது எந்தக் குலத்து மக்களுக்கும் எந்தவித வித்தியாசமும் காட்டக்கூடாதென்றும், எல்லாக் குலத்து மக்களுக்கும் மிக நியாயமாக நன்மைகள் செய்யவேண்டும் என்றும், மிகத் தாழ்ந்த குல ஜனங்களுக்கு முதலில் நன்மை செய்யவேண்டும் என்றும் நல்ல நோக்கங்கள் கொண்டிருந்தது. அக்கட்சி 1917-ஆம் வருஷம் மிகப் பெரியார்கள் என்று எல்லோராலும் மதிக்கப்பெற்ற டாக்டர் நாயர் என்பவராலும், சர்-பி-தியாகராய செட்டியார் என்பவரா

லும் ஏற்படுத்தப்பட்டது. எவ்வளவு நல்ல நோக்கங்களோடு அந்தக் கட்சி ஏற்படுத்தப்பட்டபோதிலும், சில மக்கள் அதை வெறுத்தார்கள். பனகல் அரசர் பயமில்லாமல் அதில் சேர்ந்துவிட்டார். அவர் பிறர் தூஷணைக்கு அஞ்சவில்லை. எல்லா மக்களும் நியாயப்படி நன்மைகள் அடையவேண்டும் என்ற ஒரே நோக்கத்தை அவர் கொண்டிருந்தார். ஆகையால், அக்கட்சியில் அவர் சேர்ந்து விட்டது ஆச்சரியமல்ல. அதற்கு நியாயக்கட்சி என்று பெயர்.

எல்லா ஜனங்களுக்கும் எந்த வித்தியாசமும் இல்லாமல் கடவுளுக்குப் பயந்து நியாயமாக நன்மைகள் செய்யவேண்டும் என்று அக்கட்சியார் தீர்மானம் செய்தார்கள். பலமக்கள் நாளடைவில் அதில் சேர்ந்து விட்டார்கள். ஆகையால், அது சில வருடங்களில் மிக வலிவான பெரிய கட்சியாகி விட்டது. அதில் சேர்ந்த ஜனங்கள் 1917 ஆம் வருஷம் ஆகஸ்டு மாதத்தில் ஒரு பெரிய கூட்டம் சேர்த்தார்கள். அக்கூட்டத்திற்குத் தலைவராகப் பனகல் அரசர் நியமிக்கப்பட்டார். அப்படிப்பட்ட பெரிய கூட்டங்களில் தலைவர்களாக இருப்பது பெரிய கௌரவத்தை உண்டு பண்ணும். பனகல் அரசர் எல்லா மக்களுடைய நன்மைகளையும் நியாயமாகக் கவனிக்கவேண்டும்

என்று மிகவும் விரும்பினர். அவருடைய நல்ல எண்ணத்திற்கு அப்பெரிய பதவி கிடைத்தது என்று சொல்லலாம்.

---

# அதிகாரம் ஏழு.

## மந்திரிப் பதவி.

நம் ஜனங்கள் வெகுநாட்களாகத் துரைத்தனத்தாரிடம் சில நன்மைகள் அடைய வேண்டுமென்றுஆசை கொண்டிருந்தார்கள். நம்மவர்கள் எப்போதும் அடக்கமும் பொறுமையும் காட்டும் சுபாவ முடையவர்கள்; நம் துரைத்தனத்தாரிடம் மரியாதையும், நன்றி விசுவாசமும் மிகுதியாக உடையவர்கள்; தெய்வபக்தி, இராஜபக்தி, குரு பக்தி ஆகிய இவைகளில் பூரண நம்பிக்கை உடையவர்கள். இவ்வுலகத்திலுள்ள எல்லாத் தேச மக்களும் நம்மவர்களை நல்லவர்கள் என்றே எண்ணிக் கொண்டிருக்கிறார்கள். ஆகையால், நம் ஆங்கிலேய துரைத்தனத்தார் நம் மக்கள் அன்பையும், நன்றியையும் எல்லாரைக் காட்டிலும் மிகுதியாகத் தெரிந்து கொண்டார்கள் என்பதில் சந்தேகமில்லை.

அவ்வாறு தெரிந்துகொண்டதால், அவர்கள் அரசாட்சி முறையில் சில நன்மைகள் நமக்குப்

புதிதாகச் செய்ய முன் வந்தார்கள். அந்நன்மைகளை நாம் அடையவேண்டுமானுல், நம்மவர்களில் அநேகர் அரசாங்கத்தில் பல விஷயங்கள் பேச வேண்டும். அப்படிப் பேசினுல்தான் நம்முடைய கஷ்டங்கள் அரசாங்கத்தாருக்குத் தெரியும். அவ்வாறு தெரிவித்து நம்மவர்களே நம் கஷ்டங்களை நீக்கிக் கொள்ளலாம். இப்படி நம்மவர்கள் அரசாங்கத்தில் போய்ப் பேச ஒருசபையைப் புதிதாகத் துரைத்தனத்தார் ஏற்படுத்தினுர்கள். அச்சபை சென்னைப்பட்டணத்திலுள்ள செய்ன்ட்ஜார்ஜ் கோட்டைக்குள் இப்பொழுதும் இருக்கிறது. நமது சென்னை இராஜதானியில் பல ஜில்லாக்கள் இருக்கின்றன. ஒவ்வொரு ஜில்லாவிலும் இரண்டுபேர் அல்லது மூன்று பேர் மேற்கூறிய சபையில் அங்கத்தினர்களாக இருக்கலாம் என்று ஏற்பட்டது.

மேற்கூறிய அந்தப் புதிய சபைக்குச் சட்ட நிர்வாக சபை என்று பெயர். பிள்ளைகளே, நமது இராஜதானிக்குத் தலைவர் கவர்னர் என்று உங்களுக்குத் தெரியும். அந்தக் கவர்னருக்கு உதவியாக நான்கு பேர் முன்னே இருந்தார்கள். புதிய சபை ஏற்படுத்தப்பட்டபோது அந்நான்கு பேரோடு இன்னும் மூன்று பேர்கள் அவருக்கு உதவியாக இருக்கவேண்டுமென்று தீர்மானமாயிற்று. அந்த மூன்று பேரும்தான் மந்திரிகள்.

ஆகையால், கவர்னருக்கு ஏழு பெரிய உத்தியோகஸ்தர்கள் உதவியாக ஏற்பட்டார்கள். அவர்கள் எட்டுப் பேரும் ஒன்றுகச் சேர்ந்துதான் அரசாட்சி செய்யவேண்டும் என்று ஏற்பாடு ஆயிற்று. முன்னே கூறிய நான்கு பேரும் கவர்ன்மெண்டில் உத்தியோகம் செய்தவர்களாக இருப்பார்கள். ஆனல், மூன்று மந்திரிகளும் மேற்கூறிய சபையிலிருந்து தேர்ந்து எடுக்கப்பட்டவர்களாக இருப்பார்கள். அச்சபையில் பனகல் அரசரும் ஒருவராக தேர்ந்து எடுக்கப்பட்டார். காலஞ்சென்ற சர். பி. தியாகராய செட்டியார் புதிதாக ஏற்பட்ட நியாயக் கட்சிக்குத் தலைவராக இருந்தார். அக்கட்சியில் சேர்ந்தவர்கள்தான் அதிகமாக மேற்கூறிய சபைக்கு அங்கத்தினர்களாக ஆனர்கள். ஆகையால், கவர்னர் துரை அவர்கள் சர். பி. தியாகராயசெட்டியாரையே பிரதான மந்திரியாக இருக்கும்படியாகவும், இன்னும் இரண்டு கனவான்களை மந்திரிகளாக அவரையே நியமிக்கும்படியாகவும் கேட்டார். சர். பி. தியாகராய செட்டியார் அவர்கள் பண ஆசை கொண்டவர் அல்லர்; பெருமைக்கும், ஆடம்பரத்திற்கும் ஆசைப்பட்டவர் அல்லர்; சர்வ சாதாரண வெண்மையான உடையையே அவர் தரித்துக் கொண்டிருப்பார். ஆனல், அவ்வுடை மிகப்

பரிசுத்தமாகவும், பளபளப்பாகவும் எப்போதும் இருக்கும். அவர் அவ்வுடையில் ஒரு சாது வான சந்நியாசிபோல் தோன்றுவார். அப் பெரியார் தமக்கு எந்த மந்திரி வேலையும் வேண்டாம் என்று கவர்னருக்குச் சொல்லிவிட் டார். அவர் சுப்பராய ரேட்டியார் என்பவரை யும், நம் பனகல் அரசரையும், கே. வி. ரேட்டி என்பவரையும் மந்திரிகளாக நியமிக்கலாம் என்று கவர்னரிடம் சொன்னார். கவர்னர் அவர் இஷ்டப் படி சுப்பராய ரேட்டியாரைப் பிரதான மந்திரியாக வும், பனகல் அரசரை இரண்டாவது மந்திரியாக யும், கே. வி. ரேட்டி என்பவரை மூன்றாவது மந் திரியாகவும் நியமித்தார்.

சில மாதங்கள் கழிந்ததும், பிரதான மந்திரி யாக இருந்த சுப்பராய ரெட்டியார் இறந்துவிட் டார். அவர் இறந்ததும், கவர்னர் நம் பனகல் அரசரைப் பிரதான மந்திரியாக நியமித்து விட் டார்.

---

# அதிகாரம் எட்டு.

## ஆட்சியின் பெருமை.

பனகல் அரசர் பிரதான மந்திரியாக எவ்வாறு ஆய்விட்டார் என்று மேல் அதிகாரத்தில் படித்தீர்கள். நமது இந்தியா தேசத்தில் மந்திரியாக இருந்தவர்கள் எல்லோரைக் காட்டிலும் பனகல் அரசர்தான் கெட்டிக்காரர். பிரதான மந்திரிக்குக் கவர்னருக்கு அடுத்த பெருமையும் கௌரவமும் உண்டு. ஆனால், இப்போது அரசாங்கத்தார் ஒரு பிரதான மந்திரிக்கு இருக்கவேண்டிய சகல அதிகாரங்களையும் நமது தேசத்துப் பிரதான மந்திரிகளுக்குக் கொடுக்கவில்லை. சிறிது காலம் சென்ற பிறகு எல்லா அதிகாரங்களும் அவர்களுக்குக் கிடைத்துவிடும்.

பனகல் அரசர் அரசாங்க ஞானம் இயற்கையிலேயே மிகுதியாகப் பெற்றவர்; கவர்னருக்கும் தக்க சமயத்தில் நல்ல யோசனை சொல்லும் சமர்த்தர். இவ்வுலகில் ஆங்கிலேயர்களைப் போல் அரசாங்க முறையில் சாமர்த்தியம் உடையவர்கள் எந்தத் தேசத்திலும் இல்லை. அப்படிப்பட்டவர்களில் மிகவும் கெட்டிக்காரர்களாக இருப்பவர்கள் தான் கவர்னர்களாக நியமிக்கப்படுகிறார்கள். அவ்வளவு சிறந்த சாமர்த்தியம் உடையவர்களுக்குத்

தகுந்த மந்திரிகளாக இருக்க நம் இந்தியர்களால் முடியாது என்று ஆங்கிலேய மக்களுக்கு அபிப்பிராயம் பூரணமாக இருந்தது. முதல் முறையில் தான் மந்திரியாக பனகல் அரசர் வந்தபோதிலும், இங்கிலாந்து தேசத்திலுள்ள இராஜாங்க முறை நிபுணர்களும் அதிசயிக்கும்படி அவர் தமது உயர்ந்த உத்தியோகத்தில் வேலை பார்த்து வந்தார்.

இந்தியாவிலுள்ள பல மாகாணங்களிலும் பல இந்திய மந்திரிகள் நியமிக்கப்பட்டார்கள். அவர்களில் ஒருவரும் பனகல் அரசரைப் போல் அவ்வளவு சமர்த்தாக உத்தியோகம் செய்யவில்லை என்று ஆங்கிலேயர்களே தீர்மானித்துவிட்டார்கள். பெரிய உத்தியோகங்களைப் பெற்று விட்டால், அநேக மக்கள் தங்கள் வேலையைப் பாதுகாத்துக் கொள்ள மேல் உத்தியோகஸ்தர்களிடம் எல்லா வழிகளிலும் அடங்கி நடப்பார்கள். மேலும் அவர்களுக்குக் கவர்னர் தெய்வம் போல் தோன்றுவார். அவர்கள் ஒரு விஷயத்திலும் கவர்னருக்கு விரோதமாக நடக்கவே மாட்டார்கள்; தங்கள் சுயநலத்தையே அம்மக்கள் பார்த்துக் கொள்ளுவது வழக்கம்; அதுவும் அல்லாமல், தங்கள் பந்துக்களுக்கே கூடியவரையில் பெரிய உத்தியோகங்களைக் கொடுத்துவிடுவார்கள். ஆனால்,

பனகல் அரசர் எவ்வளவு அதிகமாகக் கவர்னருக்கு மரியாதை கொடுக்கவேண்டுமோ அவ்வளவு மரியாதையும் அளித்தார்; அவர் யோசனைகளை எந்தெந்த விஷயங்களில் கேட்கவேண்டுமோ அந்த விஷ்யங்களில் கேட்கவும் கேட்டார்; ஆனால், எந்த விஷயங்களில் தமது சொந்த அபிப்பிராயத்தை நிறைவேற்ற வேண்டுமோ, அவ்விஷயங்களில் அவர் தமது விருப்பத்தின் படியே நடந்தார்.

பனகல் அரசர்தான் இந்தியர்களுக்குப் பெரிய உத்தியோகங்கள் கொடுக்கும்படி செய்தவர். அவரைப்போல் எந்த மாகாணத்து மந்திரியும் செய்யவில்லை. கவர்னரைத் தமது கருத்தின்படி நடக்கும்படி வெகு விரைவில் செய்து விடுவார். அவர் தம் சொந்த பந்துக்களுக்கு உத்தியோகங்கள் கொடுக்கவேண்டும் என்று சிறிதும் விரும்பவில்லை. நியாயமாக எல்லாக் குலத்தார்க்கும் பெரிய உத்தியோகங்கள் கொடுத்து வந்தார். ஆங்கிலேய மக்கள் வெகு காலமாகப் பார்த்துக்கொண்டு வந்த பெரிய உத்தியோகங்களையும் நம் இந்து மக்களுக்கு வாங்கிக் கொடுத்தார். ஆனால், எந்தப் பெரிய உத்தியோகத்தில் எவரை அமர்த்தினாலும், அவர் அவ்வுத்தியோகத்தைப் பார்த்துக்கொள்ளும் சாமர்த்தியம் பூரணமாகப் பெற்றவராகவே

இருப்பார். இவ்வளவு புத்தி சாதுரியமாக ஆட்களைப் பொறுக்கி எடுக்கும் சாமர்த்தியமும் அவருக்கு உண்டு.

இந்தியர்களும் அரசாங்கமுறை செய்வதில் நிபுணர்களாக இருக்கக்கூடும் என்ற எண்ணத்தை ஆங்கிலேயர்களுக்கு உண்டுபண்ணினவர் நம் பனகல் அரசரே. அவர் அதிகாரத்தில் அடங்கிய எல்லா இலாக்காக்களிலும் இந்தியர்களுக்கு அநேக உத்தியோகங்களும் கொடுத்தார்; பற்பல சீர்திருத்தங்களும் செய்தார். ஆங்கிலேய மக்களில் பெரிய உத்தியோகங்கள் வகித்தவர்களும் அவரிடத்தில் அச்சமும், மதிப்பும், அன்பும் மிகுதியாகக் கொண்டிருந்தார்கள். அரசாங்க முறைமையை வெகு அழகாகவும், சமர்த்தாகவும் செய்து வந்ததால், எல்லோரும் அவருக்கு அடங்கி இருந்தது ஆச்சரிய மல்ல. கவர்னர், மற்ற மந்திரிகள், இன்னும் உள்ள பெரிய உத்தியோகஸ்தர்கள் ஆகிய எல்லோரும் அவரது அரசியல் சாமர்த்தியத்தை மெச்சினார்கள். சென்னை ஐகோர்ட்டில் பிராம்மண நீதிபதிகளும், ஆங்கிலேய நீதிபதிகளுந்தான் வெகு காலமாக இருந்து வந்தார்கள். பனகல் அரசர் பிராம்மணர் வகுப்பில் சேராத இந்தியர்களுக்கும் அந்தப் பெரிய நியாய சபையில் நீதிபதி உத்தியோகங்கள் வாங்கிக் கொடுத்தார்.

# அதிகாரம் ஒன்பது.

## பொது நன்மைகள்.

நமது இராஜதானியில் பல ஊர்களில் ஆஸ்பத்திரிகள் இருக்கின்றன என்று உங்களுக்குத் தெரியும். அவைகளில் அநேக இந்தியர்களைப் பனகல் அரசர் நியமித்தார். அந்த வைத்திய சாலைகளில் பற்பல சீர்திருத்தங்களும் செய்தார். ஆங்கில வைத்தியத்தில் எவ்வளவு கெட்டிக்காரர்களாக நம் இந்தியர்கள் இருந்தபோதிலும், அவர்களை ஆங்கிலேயர்கள் தகுந்தபடி மதிக்கவில்லை. அவர்களை மதிக்கும்படியாகவும், பல வழிகளில் நன்மை அடையும்படியாகவும் செய்தவர் பனகல் அரசரே.

தமிழ் வைத்தியம் மிகவும் கேவலமான முறைகளை அனுசரிக்கின்ற தன்மை உடையது என்று ஆங்கிலேயர்கள் நினைத்துக்கொண்டிருந்தார்கள். தமிழ் வைத்தியத்தால் அநேக மக்களுக்குப் பலவித கஷ்டங்கள் உண்டாய் விட்டன என்றும் பலர் எண்ணிக்கொண்டார்கள். இந்தியர்களிலேயே பலர் தமிழ் வைத்திய முறையையும், தமிழ் மருந்துகளையும் இழிவாக நினைத்தார்கள்.

சில தமிழ் வைத்தியர்கள் யோசனை இல்லாமல், முரட்டுத் தனமாக வைத்தியம் செய்வது உண்மை தான். ஆனால், அது அவர்கள் தப்பிதமே யொழிய தமிழ் வைத்திய முறையிலும், தமிழ் மருந்துகளிலும் ஒரு குறையும் இல்லை. மிக அருமையான தமிழ் மருந்துகள் உண்டு. வெகு அற்புத மான தமிழ்வைத்திய முறைகளும் உண்டு. ஆனால், நம் இந்திய மக்களுக்கு ஒரு தவறான அபிப்பிரா யம் உண்டு. அதாவது, அவர்கள் தங்களுக்குத் தெரிந்த வைத்திய முறையையும், தமிழ் மருந்து களையும் மற்றவர்களுக்குக் காட்டிக்கொடுத்து விட் டால் வைத்தியம் பலிக்காது என்றும், தங்கள் பெருமை குறைந்துவிடும் என்றும் அவர் கள் அபிப்பிராயம் கொண்டிருப்பதேயாகும். ஆகையால், நல்ல முறைகளும், நல்ல மருந்து களும் பல வைத்தியர்களுக்கும், பல பொது மக்க ளுக்கும் தெரியாமல் போய்விட்டன. இந்த வித மாகத் தமிழ் வைத்தியத்திற்கும், தமிழ் மருந்து களுக்கும் குறைவு ஏற்பட்டதே யொழிய, உண்மை யில் அவைகள் மிகவும் சிறந்தவைகளேயாகும். ஆங்கில முறையாலும் ஆங்கில மருந்தாலும் குணமாகாத அநேக நோய்கள் தமிழ் முறையா லும் தமிழ் மருந்துகளாலும் குணமாகின்றன. இதில் ஒருவருக்கும் சந்தேகம் வேண்டாம்.

இந்த உளவை நன்கு அறிந்தவர் பனகல் அரசர். தமிழ் வைத்தியத்தையே ஒழித்துவிட வேண்டும் என்று அரசாங்கத்தாரும் பல இந்திய மக்களும் எண்ணிக்கொண்டிருந்த காலத்தில், பனகல் அரசர் தமிழ் வைத்திய முறைகளேயும், தமிழ் மருந்துகளேயும் பாதுகாக்க வேண்டும் என்று அரசாங்கத்தாருக்குத் தெரிவித்து, அவைகளே விருத்தி செய்யும்படி ஏற்பாடு செய்து விட்டார். இது எவ்வளவு சமர்த்தான காரியம் பாருங்கள்.

ஆங்கில வைத்திய முறையும், ஆங்கிலேய மருந்துகளும் கற்பிக்கப்படுவது போல், சென்னே மாநகரில் தமிழ் வைத்தியப் பாடசாலேயும் ஒன்று வைத்து அங்குத் தமிழ் வைத்திய முறைகளும், தமிழ் மருந்துகளும் கற்பிக்கும்படி பனகல் அரசர் செய்திருக்கின்ருர். சில தமிழ் வைத்தியர்களுக்கு உயர்ந்த சம்பளமும் கிடைக்கின்றது. அநேக பிள்ளேகளும் தமிழ் வைத்திய முறையையும், தமிழ் மருந்துகளேயும் அங்குக் கற்றுக் கொண்டு வருகிருர்கள். தமிழ் வைத்தியர்கள் ஒருவித அச்சமும் இல்லாமல், தங்கள் வைத்திய முறையை அனுசரிக்கும்படி இப்போது வசதிகளும் ஏற்பட்டு விட்டன.

நாட்டுப் புறங்களில் அநேக ஏழை ஜனங்கள் தக்க மருந்து கிடைக்காமல் இறந்து வந்தார்

கள். தமிழ் வைத்திய முறையையும் சில சமயங் களில் அனுசரிக்க வேண்டும்; ஆங்கில முறை களையும் சில வேளைகளில் அனுசரிக்க வேண்டும்; இன்னும் மக்கள் எவ்வித முறைகளையும் பொருத் தமாகத் தோன்றினால் அனுசரிக்க வேண்டியது அவசியந்தான். அப்படி இல்லாமல், ஒரே முறையை எல்லாச் சமயங்களிலும் அனுசரிப்பது உசிதமல்ல. நாட்டுப் புறங்களில் மலேரியா சுரம், நிமோனியா சுரம், இன்புளுவன்சா சுரம் முதலிய பல சுரங்கள் வருகின்றன. அவ்வித சுரங்களால் அநேக ஏழை மக்கள் மாண்டு போனார்கள். அவர்களுக்குத் தகுந்த வைத்தியம் செய்பவர்களே கிடையாது. தமிழ் வைத்தியம் செய் யும் இரண்டொரு மக்களும் சுரங்களுக்குத் தகுந்த மருந்து வைத்திருப்பதில்லை. சுரங்கள் தமிழ் மருந்து சாப்பிடுவதால் சுலபமாகப் போவதில்லை. சுரங்களுக்குத் தகுந்த மருந்து கொய்னா மருந்து தான் என்று நீங்கள் அறிய வேண்டும். ஆனால், அதை மிகவும் பக்குவமாக ஆங்கிலேய வைத்திய முறைப்படி கொடுப்பதுதான் சிறந்த வழி. அவ் வாறின்றி ஏதோ கஷாயம் சாப்பிட்டும், கை மருந்து சாப்பிட்டும் சுகம் அடையாமல் அநேக ஏழை ஜனங்கள் நாட்டுப் புறங்களில் இறந்தார் கள். சில ஏழை மக்கள் வினையின்படி ஆகும்

என்று சும்மாகவே இருந்தும் மாண்டார்கள். இது எவ்வளவு பரிதாபமாக இருக்கின்றது பாருங்கள்.

பனகல் அரசர் ஏழைமக்கள் கஷ்டங்களை முதலில் கவனிப்பவர்; தாழ்ந்தகுல மக்களின் சுகங்களை முதலில்தேடுபவர். ஆகையால், அவர் அநேக நாட்டுப் புறங்களில் ஆங்கில வைத்திய முறைப்படி ஆங்கிலமருந்துகள் கொடுக்கும்படி ஆங்கிலவைத்திய முறை தெரிந்த வைத்தியர்களைக் குடியிருக்கும்படி செய்துவிட்டார். தமிழ் வைத்திய முறையையும், தமிழ் மருந்துகளையும் அவர் மதித்தவரே என்றாலும், ஆங்கிலேய முறைகளையும், ஆங்கிலேய மருந்துகளையும் அவர் விசேஷமாகப் பாராட்டாதவர் என்று நீங்கள் நினைக்கக் கூடாது. இன்னும் பல வழிகளில் தமிழ் வைத்தியம் சிறக்கவேண்டும் என்பது அவருடைய கருத்து. எந்தெந்த இடத்தில் ஆங்கில முறையையும், மருந்தையும் கையாளவேண்டுமோ அந்தந்த இடத்தில் அவைகளை நாட்டுப்புறத்து மக்கள் கையாளும்படி செய்திருக்கிறார். இப்போது எந்த நாட்டுப்புறத்தில் பார்த்தாலும் ஆங்கிலேய வைத்திய முறை தெரிந்த வைத்தியர்கள் நிறைந்திருக்கிறார்கள். இது மிகவும் மெச்சத் தகுந்த காரியமல்லவா? இதையும் பனகல் அரசர்தான் செய்தார்.

நாட்டுப் புறங்களில் சாலைகள் அநேக இடங்களில் ஒழுங்காகவும், நன்றாகவும் இல்லாமல் இருந்தன. சில ஊர்களுக்குச் சாலைகளே இல்லாமல் இருந்தன. பனகல் அரசர் அரசாங்கத்தாரிடம் தகுந்தபடி முயற்சி செய்து, பல புதிய சாலைகளும் ஏற்படுத்தினார்; பல பழைய சாலைகளையும் அழகான புதிய சாலைகளாக மாற்றினார். பஞ்சமர்களுக்கு இந்த விஷயத்தில் அவர் மிகப் பெரிய நன்மை செய்திருக்கிறார்.

அநேக நாட்டுப் புறங்களில் ஜனங்களுக்குத் தகுந்த தண்ணீர் கிடைக்காமல் இருந்தது. கிடைத்த நீரும் சுத்தமான நீராக இல்லாமல் இருந்தது. இந்தக் கஷ்டங்களால் அநேக ஏழை ஜனங்கள் அளவு கடந்த துன்பங்கள் அடைந்து வந்தார்கள். பனகல் அரசர் அவர்கள் துன்பத்தைப் பொறுக்க முடியாமல், அநேக நாட்டுப் புறங்களில் பற்பல விதங்களாக நீர் வருவாய்கள் ஏற்படுத்தினார். நல்ல தண்ணீரும் கிடைக்கும்படி பல வழிகள் செய்தார். பயிர் பச்சைகளுக்கு வேண்டிய தண்ணீருக்கும் பல வழிகளில் வருவாய் தேடி வைக்கப் பற்பல முயற்சிகள் செய்தார்.

பஞ்சமர்களுக்கும், இன்னும் பற்பல தாழ்ந்த குல மக்களுக்கும் தனியாக ஒரு பெரிய நன்மை செய்திருக்கிறார். எவ்வளவுதான் மற்றக் குலங்க

ளில் சேர்ந்த பெரிய கனவான்கள் அவர்கள் நன்மையைக் கவனித்த போதிலும், அவர்கள் குலத்தவர்தான் அவர்கள் கஷ்டங்களை யெல்லாம் உண்மையாக அறிய முடியும். ஆகையால், ஜனங்கள் நன்மைக்காகப் புதிதாகச் சென்னைமா நகரில், சட்ட சபை என்று ஒரு சபை ஏற்பட்டது. அல்லவா? அதில் இந்தச்சென்னை இராஜதானியிலுள்ள பஞ்சமர்கள் கஷ்டங்களையும், இன்னும் பற்பல தாழ்ந்த குலத்தவர்கள் கஷ்டங்களையும் தெரிவிக்க அவர்கள் குலங்களில் இருந்தே அநேக மக்களை மேற்கூறிய சபையில் அங்கத்தினர்களாக நியமித்தார். இந்த விதமாகச் செய்ததால், அந்தத் தாழ்ந்த குலத்து மக்களுக்குப் பற்பல புதிய நன்மைகளும், கௌரவமும், மரியாதையும் மிகுதியாக உண்டாயின. இவ்வழியிலும் அந்த ஏழை மக்கள் நிலைமையை உயர்த்தினவர் நம் பனகல் அரசரே.

---

## அதிகாரம் பத்து.

### குண விசேஷங்கள்.

சிறுவர்களே, பனகல் அரசர் குணாதிசயங்களை ஒருவாறு தெரிந்துகொள்ள வேண்டியது மிகவும் அவசியமே. அவர் தம் வரையில்

நல்ல உணவும் உடையும் இருக்கவேண்டும் என்று சிறிதும் நினைக்கவேயில்லை. அவர் ஒரு பெரிய செல்வம் மிக்க குடும்பத்தில் பிறந்திருந்த போதிலும், தம் சுகங்களைப் பொருட்படுத்தவேயில்லை. எவ்வளவோ சுகமான அமைதியான வாழ்க்கையை அவர் அடைந்திருக்கலாம். ஆனால், அவர் சதா ஏழை மக்களுக்கும், தமது தேசத்து மக்களுக்கும் உழைப்பதிலேயே காலத்தைக் கழிக்கத் தீர்மானம் செய்துகொண்டார். ஏழைகளின் உண்மை நண்பர் என்றும், தமக்கென வாழாமல் மற்றவர்களுக்காக வாழ்ந்த குணவந்தர் என்றும் அவரை நன்றாகச் சொல்லலாம்.

பனகல் அரசர் ஒரு காலத்திலும் தம் எதிரிகளிடத்திலும் ஒரு கடுமையான சொல்லைச் சொன்னதே யில்லை. குழந்தைபோல் எல்லோரிடத்தும் அன்பாகவும், இன்பமாகவும் பேசுவார். எந்த வேளையில் வேண்டுமானாலும் அவரை எந்தத் தாழ்ந்த குலத்து மனிதனும், எந்த ஏழை மனிதனும் போய் நேராகப் பார்த்துப் பேசலாம். ஒருவரிடத்திலும் கோபித்துக் கொள்ளவே மாட்டார். அவர்கள் எல்லோரும் தம்மைத் தங்கள் சொந்தக்காரர் போல் நினைத்துக் கொள்ளும்படி அவர்களிடம் பேசுவார். அவரைப்போல் சாந்த புருஷர் கிடைப்பது மிகவும் அருமை. எப்படிப்பட்டவரையும்

எளிதில் மயக்கி விடும்படியான இனிய நடக்கை உடையவர். அரசாங்கத்திலுள்ளவர்களில் தமக்கு விரோதமாக உள்ளவர்களையும் வெகு விரைவில் தமது வசத்தில் கொண்டு வந்து விடுவார். எந்த கட்சிக்காரர்களையும் ஒரு காலத்திலும் தூஷிக்கவே மாட்டார். அவர்களிடத்திலும் மிகப் பொறுமையாகவும் அழகாகவும் பேசி, அவர்கள் மனங்களை மாற்றி விடுவார்.

ஒரு சொல்லைச் சொல்லிவிட்டால், பனகல் அரசர் எக்காரணத்தைக் கொண்டும் அதை மாற்றவே மாட்டார். எவருக்கு என்ன வாக்குக் கொடுத்தாரோ அதை அவர் நிறைவேற்றியே தீர்ப்பார். அந்த மனிதன் தமக்கு விரோதியாகப் பிறகு மாறி விட்டாலும், அவனுக்கும் தமது வாக்கின்படி அவர் நன்மை அவசியம் செய்வார்; விரோதிகளின் சமர்த்தையும், அறிவையும் சிறப்பாக மெச்சிப் பேசுவார்; அவர்களுக்கும் தகுந்த உத்தியோகங்கள் அளித்தார்.

பனகல் அரசர் பழிபாவத்திற்கு மிகவும் அஞ்சினவர்; தெய்வத்தினிடத்தில் அதிக பக்தி உடையவர்; உண்மைக்கு இணங்குபவர். தமக்கு எவ்வளவு அதிகமாக உத்தியோக சம்பந்தமாக வேலைகள் இருந்த போதிலும், தினந்தோறும் தவறுமல் நெடுநேரம் கடவுள் பூஜை செய்வார்;

நன்ருகப் படித்தவர்களிடத்திலும், பொது நன்மைக்கு உழைக்கும் மக்களிடத்திலும் மிகுந்த மதிப்பும்; மரியாதையும் உடையவர். எவரிடத்திலும் ஒரு வித வித்தியாசமும் இல்லாமல் கலந்து, உணவும் உண்டு, அளவளாவி அவரை மகிழ்விப்பார்.

பனகல் அரசர் முதல் முதலில் மந்திரி வேலையை எற்றுக்கொள்ளவே மாட்டேன் என்று கவர்னருக்குச் சொல்லி விட்டார். வில்லிங்டன் துரைதான் அப்போது கவர்னராக இருந்தார். அவர் பனகல் அரசரை மந்திரியாக இருக்கும்படி பலமுறை வற்புறுத்தினுர். ஆனல், பனகல் அரசர் தமக்கு ஒரு பெரிய மந்திரி வேலையைப் பார்க்கக்கூடிய திறமை இல்லையென்று கவர்னரிடம் சொன்னுர். இது எவ்வளவு அருமையான குணம் பாருங்கள். அவருக்குக் கவர்னருடைய வேலையைப் பார்க்கும் சாமர்த்தியம் இருந்தும், அவருக்கே தமது வல்லமை தெரியாமல் இருந்தது.

எவ்வளவு செல்வமும், அதிகாரமும் இருந்த போதிலும், எந்த விதமான ஆசையும் அவர் பெற்றில்லை; மிகவும் ஒழுக்கம் உடையவராக இருந்தார்; பிறரிடத்தில் எவ்வித வெகுமானமும், பொருளும் வாங்கவேயில்லை. மொத்தத்தில், அவ்வரை ஒப்பற்ற பெருமை வாய்ந்த பெரியோர்களில் ஒருவராகத் திடமாகச் சொல்லலாம்.

# அதிகாரம் பத்து.

## கோயில் சீர்திருத்தங்கள்.

நமது தேசத்தில் கோயில்களுக்குக் குறைவில்லை என்று உங்களுக்குத் தெரியும். முற்காலத்து அரசர்கள் ஏராளமாகப் பணம் செலவு செய்து, எத்தனையோ அழகான கோயில்கள் நாடெங்கும் கட்டி, நமது தேசத்திற்கு ஒரு தனி அழகை உண்டு பண்ணினார்கள்; குன்றுகளின் மீதும், மலைகளின் மீதும் விநோதமான கோயில்கள் பற்பல கட்டி இருக்கின்றார்கள்; அவைகளுக்கு ஒரு வருஷத்தில் செலவாகும் தொகைக்கு அதிகமாகவே வரும்படி அக்கோயில்களுக் கென்று அநேக நிலங்கள் இனமாகவும் விட்டிருந்தார்கள்.

நம்மவர்கள் மிகுந்த தெய்வபக்தி உடையவர்கள். ஆகையால், ஆலயங்களில் அநேக விதமான திருப்பணிகள் செய்து வந்தார்கள். கடவுளுக்குப் பலவிதமான பிரார்த்தனைகள் பல பதிகளில் உள்ள ஆலயங்களுக்குச் சென்று நிறைவேற்றி வந்தார்கள். அவ்வாறு செய்ததால், கோயில்களுக்கு ஏராளமாகப் பணம் சேர்ந்து வந்தது. நம்மவர்கள் கோயில்களுக்குப் பணம் செலவு செய்வதை எல்லாவற்றிலும் சிறந்த புண்ணியச் செயலாக நினைப்பவர்கள். ஆகையால்,

நமது தேசத்தில் கோயில்களுக்கெல்லாம் வருஷந்தோறும் பணம் அதிகரித்துக்கொண்டே வந்தது.

நமது தேசத்தில் மதங்களின் கொள்கைகளைப் பரவச் செய்வதற்கும், மதங்களின் பெருமைகளை நிலைநிறுத்துவதற்கும் பல மடங்களும் ஏற்பட்டன. அக்கருத்தோடு அம்மடங்களை ஒழுங்காகக் கவனிப்பதற்குக் கல்லியாணமாகாத சில கல்விமான்கள் அம்மடங்களுக்கு அதிகாரிகளாகவும் ஏற்படுத்தப்பட்டார்கள். அவர்களுக்குத்தான் மடாதிபதிகள் என்று பெயர்.

பிள்ளைகளே! நமது தேசத்தின் கோயில்களின் வரலாறுகளையும், மடங்களின் வரலாறுகளையும் நீங்கள் ஒருவாறு தெரிந்து கொண்டீர்கள். கோயில்களுக்கு அதிகாரிகளாகச் சில மக்கள் இருந்து வந்தார்கள். அவர்களுக்குத் தருமகர்த்தர்கள் என்று பெயர். அந்தத் தருமகர்த்தர்களும், மேற்கூறிய மடாதிபதிகளும் மிக உத்தமர்களாக எல்லோராலும் கருதப்பட்டு வந்தார்கள். நம்மவர்கள் அவர்களைத் தெய்வத்திற்கு அடுத்த பதவியில் இருப்பவர்களைப் போலவும் எண்ணி வந்தார்கள். அவர்களுக்கு அவ்வளவு மரியாதை நம்மவர்கள் காட்டி வந்த போதிலும், அவர்களில் அநேகர் கேவலமான செய்கைகளைச் செய்து வந்தார்

கள். கோயில்களின் பணமும், மடங்களின் பணமும் முக்கியமாக வேசிகளுக்குச் செலவாகி வந்தன. இன்னும் மடாதிபதிகளும், தர்மகர்த்தர்களும் தங்கள் மனம்போன செலவுகளுக்கும் அவ்வருமானங்களை உபயோகப்படுத்தி வந்தார்கள். இப்படிப்பட்ட அநியாயங்கள் கடவுள் பெயராலும், மதங்களின் பெயராலும் வெகு காலமாக நடந்துகொண்டு வந்தபோதிலும், அவைகளைத் தடுக்க நம்மவர்கள் ஒரு முயற்சியும் செய்யவில்லை. படித்தவர்களும் பணக்காரர்களுங்கூட மடாதிபதிகளுக்கும், தருமகர்த்தர்களுக்கும் பயந்திருந்தார்கள்.

சன்னியாசித் தொழில் பூண்ட மடாதிபதிகளுக்குப் பட்டாடைகளும், பசும் பொன்னும், ஆபரண அழகுகளும் ஏற்பட்டுவிட்டன. பல தர்மகர்த்தர்களுக்கு ஆஸ்தியும் சேர்ந்துவிட்டது; ஒழுக்கமும் ஒழிந்துவிட்டது. இந்த அநியாயங்களைப் பனகல் அரசர் சிறு வயதிலேயே வெகு நன்றாக அறிந்து கொண்டிருந்தார். அந்த இழிவான செய்கைகளை எப்படி ஒழிப்பதென்று அவர் வெகு காலமாக மனக்கவலையும் கொண்டிருந்தார். பனகல் அரசர் மந்திரியாக நியமிக்கப்பட்டதும், மடாதிபதிகளின் இழிந்த செய்கைகளை ஒழிப்பதற்கும், தருமகர்த்தர்கள் இழிந்த செய்கை

களை ஒழிப்பதற்கும் ஒரு புதிய சட்டம் கொண்டு வந்தார். அதற்கு, 'இந்துசமயச் சீர்திருத்தச் சட்டம்' என்று பெயர். அச்சட்டத்தின் நோக்கம் என்னவென்றால், கோயில்களில் திருவிழா, அபிஷேகம், பூசை முதலியவைகளுக்குச் செலவாகும் பணம் போக, மிகுதிப் பணத்தை ஒழுங்காக மடாதிபதிகளும், தர்மகர்த்தர்களும் கவர்ன்மெண்டார்க்குக் கணக்குக் காண்பித்துப் பாதுகாக்க வேண்டும் என்பதாம். இது மிகவும் நல்ல நோக்கமாக இருந்தும், சில ஜனங்கள் தங்கள் சுயநலத்திற்காக அச்சட்டத்தை எதிர்த்தார்கள். பல மடாதிபதிகளும், தருமகர்த்தர்களும் இரகசியமாக அச்சட்டத்தைத் தடுக்க ஏராளமாகப் பணம் செலவு செய்தார்கள். எத்தனையோ வழிகளில் எத்தனையோ விதமாகவும் அதைத் தடுக்க அவர்கள் பல முயற்சிகள் செய்தார்கள்.

பனகல் அரசரிடமும் பல மனிதர்கள் இரகசியமாக வந்து, அவரையும் ஆசைவலையில் இழுத்துக் கொள்ளப் பார்த்தார்கள். ஆனால், ஒன்றிற்கும் அவர் இடம் கொடுக்கவில்லை. பனகல் அரசர் ஒரு சிறிதும் அஞ்சாமல், தமது பூரண வல்லமையைக் காட்டி, அச்சட்டத்தை ஏற்படுத்திவிட்டார். அவர் ஒப்பற்ற சாமர்த்தியத்தை எல்லாக் குலத்து மக்களும் துரைத்தனத்தாரும் கண்டு

அதிசயித்தார்கள். அநேக பிராம்மணர்களும், மடாதிபதிகளும், தர்மகர்த்தர்களும் செய்த கிளர்ச்சிகள் பயனற்றுப் போயின. கோயில்களில் வரும் வருமானங்களும், மடங்களில் வரும் வருமானங்களும், அவைகள் இரண்டிற்கும் உபயோகப் படுத்துவதோடு, ஏழை மக்களுக்கு வைத்தியசாலைகளும், ஏழைப் பிள்ளைகளுக்குப் பாடசாலைகளும் ஏற்படுத்தவும் உபயோகப்படுத்தலாம் என்றும் பனகல் அரசர் சட்டம் ஏற்படுத்திவிட்டார். அவர் ஏற்படுத்திய சட்டத்தால் நமது தேசத்திற்கு அளவு கடந்த நன்மைகள் உண்டு. நம் பனகல் அரசர் செய்த இந்த அரிய பெரிய செய்கை எவ்வளவு ஒப்பற்றது என்று பாருங்கள்.

---

## அதிகாரம் பன்னிரண்டு.

### பனகல் கட்சியின் தோல்வி.

நியாயக் கட்சி என்று ஒரு கட்சி நமது இராஜதானியில் ஏற்பட்ட விஷயம் உங்களுக்குக் கவனம் இருக்கும். அக்கட்சிக்குத் தலைவர் பனகல் அரசரே என்று உங்களுக்குத் தெரியும். சர். பி. தியாகராஜ செட்டியாருக்குப் பிறகு அக்கட்சி அழிந்துவிடும் என்றே அநேகர் எண்ணினார்கள். ஆனால், அவருக்குப் பிறகு அக்கட்சிக்குத் தலைவராக வந்த பனகல் அரசர் மகா நிபு

ணர் என்பதை அவர்கள் அறியாமல் போனார்கள். முன் இருந்ததைவிட அக்கட்சி பனகல் அரசரைத் தலைவராகக் கொண்டபோது அதிக உரம் கொண்டு விட்டது.

பனகல் அரசர் ஆறு வருஷ காலம் பிரதான மந்திரியாக இருந்து, பெருங் கீர்த்தி பெற்றார். அவ்வளவு நீண்ட காலம் பிரதான மந்திரியாக இருப்பது மிகவும் கடினம். அவர் தமது பெருஞ் சமர்த்தால்தான் அப்பெரும் பதவியை அவ்வளவு நீண்டகாலம் பெற்றிருந்தார்; தமது கட்சியைப் பல வழிகளிலும் பலப்படுத்தி விட்டார். அப்படி இருந்தும், அவரது கட்சி 1926-வது வருஷம் அவர் எதிர்பாராதபடி தோல்வி அடைந்து விட்டது. ஆகையால், அவர் மந்திரியாக இருப்பதற்கு முடியாமல் போய்விட்டது. ஆனால், எந்தக் கட்சியும் ஒழுங்காக இல்லாமையால், எந்தக் கட்சிக்காரர்களும் மந்திரிகளாக இருக்க வழியில்லாமல் இருந்தது. ஆகையால், கவர்னர் பனகல் அரசரையே மறுபடியும் மந்திரிகளை நியமிக்கும்படி கேட்டார். பனகல் அரசர் அப்படிச் செய்வது ஒழுங்கல்ல என்று நினைத்துத் தமது கட்சி தோல்வி அடைந்து விட்டமையால், மந்திரிகளை நியமிக்க முடியாதென்று திட்டமாகச் சொல்லி விட்டார்.

பிறகு, கவர்னர் தாம் நினைத்தபடி வேறு கட்சியில் மூன்று மந்திரிகளை நியமித்து விட்டார். சில மாதங்கள் கழிந்ததும், அம்மந்திரிகளின் பதவிகள் நிலையில்லாமல் இருந்தன. பனகல் அரசர் பின்னால் நடக்கும் சம்பவங்களை முன்னமே தெரிந்துகொள்ளும் சாமர்த்தியம் உடையவர்.

பனகல் அரசர் அம்மந்திரிகள் நிலைமையை நன்றாக அறிந்து கொண்டார். அவர் உடனே அவர்களை நீக்கிவிட முயற்சி செய்தார். இராஜாங்க தந்திரம் அவருக்குத் தெரிந்தது போல மற்றவர்களுக்குத் தெரியாது. மூன்று மந்திரிகளின் பதவிகளும் பனகல் அரசர் கையில்தான் அகப்பட்டுக் கொண்டன. அவர் தமது கூரிய அறிவால் பல சூழ்ச்சிகள் செய்து கொண்டு அம்மூன்று மந்திரிகளுக்கும் பலவித தடைகள் கொண்டு வந்தார். அவர்கள் மந்திரிப் பதவிகள் தினந்தோறும் ஆபத்தான நிலையில் இருந்தன. அவர்களை இவ்வாறு செய்தது அரசாங்கத் துறையில் பனகல் அரசர் பெற்றிருந்த பெரும் சாமர்த்தியமேயாகும். ஆகையால், அவர் கட்சி தோல்வி அடைந்த போதிலும், அக்கட்சிக்கு அதிக பலத்தை அவர் உண்டு பண்ணி விட்டார்.

அப்போது பிரதான மந்திரியாக இருந்தவர் அவருக்கு ஒரு வழியில் சீடரே யாவர். டாக்டர்

சுப்பராயன்' என்பது அப்பிரதான மந்திரியின் பெயர். பனகல் அரசர் முதல் தடவை மந்திரியாக இருந்தபோது அவருக்குக் காரியதரிசியாக அவர் இருந்தார். டாக்டர் சுப்பராயன் அவர்கள் கொள்கை பிறகு மாறி விட்டது. ஆகையால், அவர் பனகல் அரசர் கட்சியிலிருந்து விலகிக் கொண்டார். இருந்தாலும், அவருக்குப் பனகல் அரசர் மீது மிகச் சிறந்த மதிப்பும், மரியாதையும் உண்டு. அவருக்குப் பனகல் அரசர் இராஜாங்க விஷயங்களைக் கவனிப்பதில் மகா நிபுணர் என்ற அபிப்பிராயம் உள்ளுக்குள் இருந்தது. பனகல் அரசர் அவர் உட்கருத்தையும், உள்ளன்பையும் நன்றாகத் தெரிந்து கொண்டார். ஆகையால், அவர் டாக்டர் சுப்பராயன் என்பவரைப் பிரதான மந்திரியாகவே இருக்கும்படி செய்யவேண்டுமென்று தீர்மானித்தார்.

பனகல் அரசர் மற்ற இரண்டு மந்திரிகளையும் நீக்கிவிடவேண்டுமென்று தீர்மானித்து விட்டார். அவர் பிரதான மந்திரியை வெகு விரைவில் மிக எளிதாகத் தமதுவழிக்குக் கொண்டுவந்துவிட்டார். பிரதான மந்திரியும் அவர் சொற்படியே நடக்க வேண்டியவரானார். பனகல் அரசர் நல்ல சமயம் பார்த்து, மற்ற இரண்டு மந்திரிகளையும் தங்கள் உத்தியோகங்களை விட்டுவிடும்படி முயற்சி செய்

தார். அவர் முயற்சி பலித்து விட்டது. அந்த இரண்டு மந்திரிகளும் எதிர்பாராத கஷ்டங்களால் தங்கள் உத்தியோகங்களை விட்டு விட்டார்கள். பிரதான மந்திரியோ பனகல் அரசர் யோசனைகளை முற்றிலும் கேட்க ஆரம்பித்தார். பனகல் அரசர் சொன்ன ஏற்பாடுகளையும் தவறுமல் செய்ய ஆரம்பித்தார். பனகல் அரசரின் சாமர்த்தியம் எவ்வளவு அதிகமாக இருந்தது பாருங்கள்.

பிறகு பனகல் அரசர் தகுந்தவர்களாகவும், கெட்டிக்காரர்களாகவும் தோன்றிய ஒரு முதலியாரையும், ஒரு பிராம்மணரையும் புதிய மந்திரிகளாக நியமிக்கும்படி ஏற்பாடு செய்துவிட்டார். அவ்விருவரும் பனகல் அரசர் சொற்படி நடப்பவர்கள்; அவரிடத்தில் மதிப்பும் உடையவர்கள். பனகல் அரசர் சாதி வித்தியாசம் பாராமல், ஒரு பிராம்மணருக்கு மந்திரி பதவி வாங்கிக்கொடுத்தார். கோயில் சீர்திருத்தங்களுக்காக ஏற்பட்ட இந்து மத போர்டுக்குத் (Board) தலைவராக ஒரு பிராம்மணரையே முன் ஏற்படுத்தி இருந்தார். அநேக பிராம்மணர்களுக்கும் அநேக நன்மைகள் செய்திருக்கிறார். ஆகையால், அவர் ஒரு குலத்தாரையும் வெறுத்தவர் அல்லர்.

பனகல் அரசர் மந்திரியாக இல்லாமலிருந்தும், இன்னும் ஒரு பெரிய காரியம் செய்தார். நிர்வாக சபை சட்ட அங்கத்தினர் வேலை காலியாயிற்று. ஒரு அந்தணர் புதிதாக அப்பதவியை அடைந்தார். ஆனால், அப்புதிய வேலைக்குச் சில உரிமைகள் கொடுக்கப்படவில்லை. ஆகையால், அவர் தமது வேலையைச் சிலர் யோசனைகளைக் கேட்டு விட்டுவிட்டார். அப்போது பனகல் அரசர் மிகவும் தந்திரமாக வேலை செய்து, தமது கட்சியில் சேர்ந்த நல்ல குணமும், திறமையும் வாய்ந்த கிருஷ்ண நாயரைச் சட்ட அங்கத்தினராக நியமிக்கும்படி ஏற்பாடு செய்துவிட்டார். இது எவ்வளவு ஆச்சரியமான காரியம் பாருங்கள். ஆகையால், பனகல் அரசர் மந்திரியாக இல்லாமல் இருந்த போதிலும், இராஜாங்கம் அவர் கையில்தான் இருந்தது என்று சொல்லுவது தப்பல்ல. எல்லா மக்களும் அவருடைய அறிவையும், திறமையையும் மெச்சினார்கள்.

# அதிகாரம் பதின்மூன்று.

## பெரும் புகழ்.

பனகல் அரசர் பல பெரிய காரியங்கள் அரசாங்கத்தில் செய்து "இராஜா" என்ற பட்டமும், கே. சி. ஐ. இ. (K. C. I. E) என்ற மகத்தான பட்டமும் துரைத்தனத்தாரிடம் பெற்றார். எல்லா ஏழைகளுக்கும், பஞ்சமர்க்கும் பெரிய நன்மைகள் செய்து, பெரிய தருமவந்தனர் என்ற நல்லபேர் வாங்கினார்; கல்வியை வளர்த்து, மிக்வும் புண்ணியர் என்றும் கீர்த்தி பெற்றார். இந்தியா முழுவதும் அவர் பெயர் சிறந்து விளங்கிற்று.

பனகல் அரசர் பிறகு திடீரென்று அசௌக்கியம் அடைந்தார். அவர் தமது தேசத்து மக்கள் நன்மைகளுக்காக இரவும் பகலும் சலிக்காமல் உழைத்து வந்ததால், அவருக்குச்சீக்கிரத்தில் தேக வலிவு குறைந்தது. விஷசுரம் என்னும் கொடிய நோய் அவரைத் தாக்கி விட்டது. எவ்வளவோ வைத்திய முறைகளைப் பார்த்தும் பயன்படவில்லை. 1928-ம் வருஷம் டிசம்பர் மாதம் 16-ஆம் தேதி பனகல் அரசர் அதிக கஷ்டம் இல்லாமல், அமைதியாக இந்நில வாழ்வை நீத்தார். பெரிய நன்மைகளைச் செய்த அவரை இந்தியா தேசம் அதிலும் முக்கியமாகத் தென் இந்தியா தேசம், மறக்கவே முடியாது. அவர் இறந்ததும், அநேக மக்கள் கூட்டம் கூடி, அவரைப் பற்றி மிகவும் புகழ்ச்சியாகப் பேசினார்கள். எல்லாக் குலத்தவர்களும் பனகல் அரசரைச் சட்ட சபையில் வாயாரப் புகழ்ந்தார்கள். துரைத்தனத்தாரும் அவரைப் புகழ்ந்து, விடு முறையும் விட்டார்கள்.

## ஒற்றுமை ஆபீஸ் பிரசுரங்கள்.

| | | ரூ. | அ. |
|---|---|---|---|
| 1. | இராஜராஜன் | ... 1 | 8 |
| 2. | திருவள்ளுவர் நூல் நயம் | ... 1 | 0 |
| 3. | தமிழ்நாட்டு நவமணிகள் | ... 0 | 8 |
| 4. | சிலப்பதிகார விளக்கம் | ... 1 | 8 |
| 5. | மீனலோசனி | ... 0 | 10 |
| 6. | ராஜாராம் மோகன ராய் | ... 0 | 10 |
| 7. | ஞானகுரு | ... 0 | 10 |
| 8. | ராஜாதிராஜன் | ... 0 | 5 |
| 9. | அன்பின் மாட்சி | ... 0 | 8 |
| 10. | சர்தாமஸ் மன்ரோ | ... 0 | 12 |
| 11. | கோவூர் கிழார் | ... 0 | 2 |
| 12. | இந்தியத் தலைவர்கள் | ... 0 | 4 |
| 13. | இராஜி: உயிரைக் காப்பாற்றிய நாய் | 0 | 5 |
| 14. | சேலம் ராமசாமி முதலியார் சரிதை | 0 | 2 |
| 15. | ஈஸ்வர சந்திர வித்தியாசாகரர் | ... 0 | 2 |
| 16. | பனகல் அரசர் | ... 0 | 3 |
| 17. | கோபால கிருஷ்ண கோக்ஹேல் | 0 | 10 |
| 18. | நஞ்சங்கோடு தாசில்தார் | ... 0 | 2 |
| 19. | நன்னெறி நீதிக் கதைகள் | ... 0 | 7 |
| 20. | சிலப்பதிகாரக் கதை | ... 0 | 8 |

ஒற்றுமை ஆபீஸ், சைதாப்பேட்டை, மதராஸ்.